மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இடவசதிப் பிரச்சினை தவிர டாக்டர்கள் பிரச்சினை இல்லை. எந்த எந்த மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் இடமிருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இடவசதியுள்ள இன்னும் மூன்று நான்கு மாவட்டங்களில் சீக்கிரமே ஏற்படுத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : செய்தித் தாளில் பம்பாயில் ஆண் குழந்தை வேண்டுமென்றால் ஆண் குழந்தை, பெண் குழந்தை வேண்டுமென்றால் பெண் குழந்தை பெற்றுக்கொள் வதற்கு மருந்து கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி வந்ததே. அந்த மருந்தினால் ஒரு பெண் குழந்தை வேண்டும் என்பவர்கள் பெண் பிறந்தவுடன் பாமிலி ப்ளானை பின்பற்றலாம். அதுபோல ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்பவர்கள் ஆண் குழந்தை பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்க உதவியாக இருக்கும். அந்த மருந்தை பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்கம் ஏற்று நடத்துகிற அளவுக்கு அந்த மருந்தின் முழு அளவுத் தகுதி அரசுக்குத் தெரியாது.

முட்டைத்தூள் தொழிற்சாலை.

* 72 வினா.—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி (Egg powder) செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழ்நாடு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, பொதுவாக குழந் தைகளுக்குப் புரதச் சத்து குன்றுவதன் காரணமாக அறிவு வளர்ச்சி குறைகிறது என்று கூறப்படுகிறதே, புரதச்சத்து அளிக்க முட்டை தேவைப்படுகிறது. இப்போது கிடைக்கிற முட்டைகள் நல்லவைகளாகவும் கிடைப்பதில்லை. அதை முன்னிட்டு முட்டைப் பவுடர் தயாரிப்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் இந்தக் குறையைப் போக்க அரசு முன்வருமா என்று அறியவிரும் புகிறேன்.

1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் எந்த ஒரு புதிய திட்டத்தை மேற்கொள்வதாக இருந்தாலும் மூலப்பொருள் தாராளமாகக் கிடைக்குமா என்று பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் குத்து மதிப்பாக எடுத்த கணக்கில் தேவைப்படுகிற முட்டைகளோ ஆள் ஒன்றுக்கு ½ முட்டை என்ற அளவில் எழுநூறு கோடியாகும். ஆனால் முப்பத்தைந்து கோடி முட்டைகளே உற்பத்தியாவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே அரசு முட்டை உற்பத்தியைக் கணிசமாக உயர்த்துவதற்கான முயற்சியில் கவனம் செலுத்துகிறது. உற்பத்திக் தேவைக்கேற்ற அளவில் பெருகியவுடன் தான் முட்டைப் பவுடர் செய்வது சம்பந்தமாக அரசு ஆலோசிக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

Committee on Air pollution

* 73 Q.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a Committee has been appointed by the Government to study the problem of air pollution;

(*b*) if so, the names of its members; and

(*c*) its terms of reference?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இக் குழு கீழ்க்காணும் அதிகாரிகளைக் கொண்ட ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுவிலே இடம் பெற்றவர்கள்—

(1) கூட்டு இயக்குநர், சுகாதாரப்பணி—குடும்பநலத் துறை.

(2) பொதுச்சுகாதாரம் பொறியியல்--நகராட்சிப் பணித் துறை, தலைமைப் பொறியாளரின் பிரதிநிதி ஒருவர்.

(3) சென்னை மாநகராட்சியிலிருந்து ஒரு பிரதிநிதி.

(4) அரசுப் போக்குவரத்துத்துறையிலிருந்து ஒரு பிரதிநிதி.

(5) காவல் (போக்குவரத்து) துறையிலிருந்து ஒரு பிரதிநிதி.

(6) தொழிற்சாலைகள் துணை இன்ஸ்பெக்டர்.

(உ) இக்குழு காற்று எவ்வாறு தூய்மை கெடுகிறது, எவற்றினால் காற்றுத் தூய்மை கெடுகிறது என்பது பற்றி ஆய்ந்து, முதலில் சென்னை மாநகரில் காற்று தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய உருவான, நடைமுறைக்கேற்ற ஆலோசனைகளை நல்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.